**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்**

**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

# வெளிவாரிப் பரீட்சைக்காக பதிவு செய்த பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல் - 2016 (பழைய பாடத்திட்டம்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, வியாபார நிர்வாகமாணி மற்றும் வணிகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்பரீட்சைகளுக்குப் பதிவு செய்துள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து **(பழைய பாடத்திட்டம் - 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்தவர்கள்)** முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடங்களுக்கான பரீட்சைக்கு விண்ணப்பங்கள் 28.03.2016 வரை கோரப்படுகின்றன.

**1. விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல்**

பரீட்சை விண்ணப்பப் படிவங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்:

- இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.seu.ac.lk/cedpl/) இதனை பதிவிறக்கம் செய்தல்
- தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் நேரடியாகப் பெறல்
- தபால் மூலமாக பெற்றுக்கொள்ள விரும்புவோர். ரூபா 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுயவிலாசமிடப்பட்ட 9"X4" அளவிலான தபாலுறையை 17.03.2016 வரை பெற்றுக் கொள்ளல். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பாடநெறிக்கான பதிவு இலக்கத்துடன் "பரீட்சைக்கான விண்ணப்பம்" எனவும் அவசியம் குறிப்பிடல் வேண்டும் (உரிய பரீட்சையின் பெயரைக் குறிப்பிடவும்)

**2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

Assistant Registrar,
Centre for External Degrees & Professional Learning (CEDPL)
South Eastern University of Sri Lanka
Oluvil # 32360

**3. பரீட்சார்த்திகளின் கவனத்திற்கு:**

- 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் (பழைய பாடத்திட்டம்) வெளிவாரிப் பரீட்சைக்கு பதிவு செய்தவர்களும் இரண்டாம் மூன்றாம் வருடங்களுக்கு தங்களது பதிவை மீள்பதிவு செய்து கொண்டவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.
- இரண்டாம் மூன்றாம் வருடங்களுக்கு தங்களது பதிவை மீள்பதிவு செய்யாதவர்கள் குறிப்பிட்ட பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாகும். இவ்வாறு மீள்பதிவு செய்யாதவர்கள் நேரடியாக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்திற்கு வருகை தந்து மீள்பதிவு செய்ததன் பின்னரே பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **28.03.2016** வரை ஏற்றுக் கொள்ளப்படும். பூரணப்படுத்தப்படாத, மீள்பதிவு செய்யப்படாத மற்றும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
- 2015 ஆம் ஆண்டு மூன்றாம் வருட கலைமாணி இறுதிப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றுடன் பரீட்சை விண்ணப்பப்படிவம் தேவையேற்படின் அனுப்பி வைக்கப்படும்.
- மூன்றாம் வருட மாணவர்களுக்கு மாத்திரம் பரீட்சை முன்னோடிக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இக்கருத்தரங்கிற்கான விண்ணப்பப்படிவம் மற்றும் உரிய அறிவித்தல்கள் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். மூன்றாம் வருட சகல பாடங்களுக்கும் பரீட்சைக் கட்டணத்துடன் கருத்தரங்கிற்கான கட்டணங்களும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு: 067-2052 801

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்